ஸ்ரீ தந்வந்தரயே நம:

# வைத்திய சந்திரிகா


தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை

பிரமாதீச
ஐப்பசி

நவம்பர்
1973





தொகுதி 35
பகுதி 11

Vol. 35
No. 11

ஆசிரியர் & பிரசுரகர்த்தா

வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.



ரஸ ஸம்ஸ்காரம் ... 201

ஸ்ரீ சாங்காணி வைத்ய முறைகள் ... 206

உதரத்தில் சிகித்ஸை ... 211

ஆரோக்கியப் பாதுகாப்பிற்கான முறைகள் ... 214



வருஷச் சந்தா ரூ. 5/-

Annual Subscription Rs. 5/-

காரியாலயம்: 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

# வைத்யரத்னம் P. S. வாரியருடைய

# ஆர்ய வைத்தியசாலா

## கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

Registered THE ARYA VAIDYA SALA KOTTAKAL Trade Mark.

தலைமை ஆபீஸ் போன் : கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ்
ஆபீஸ் - அட்மினிஸ்டிரேடர் - மானேஜர் தொடர்புடன் போன் நெ. 31
நர்ஸிங்ஹோம் போன் நெ. 44
தலைமை வைத்யர் போன் நெ. 25
மானேஜிங் டிரஸ்டி (வீடு) போன் நெ 27
(ஆபீஸ்) போன் நெ 61
மானேஜர் (வீடு) போன் நெ. 26

**சென்னை கிளை :**

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

**மற்ற கிளைகள் :**

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணாகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும். எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு :—

**மானேஜிங் டிரஸ்டி.**
ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.



ஸ்ரீ தந்வந்தரயே நம:

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை

| | | |
|---|---|---|
| தொகுதி 35 | பிரமாதீச - ஐப்பசி | பகுதி 11 |
| Vol. 35 | நவம்பர் 1973 | No. 11 |


## ரஸ ஸம்ஸ்காரம்.

வைத்ய. எஸ். வி. ரா. சாஸ்திரீ

ஆயுர்வேத மருந்துகளில் சக்தி மிகுந்ததாகக் கருதப்படுபவை ரஸௌஷதங்களே. குறைந்த அளவில் கொடுக்குந்தன்மை, அதனுல் வாய்க்கு ருசிக்கேடு ஏற்படாதிருத்தல், சீக்கிரமே உடலில் கலந்து குணம் தருவது-இம்மூன்றும் ரஸௌஷதங்களின் தனிச்சிறப்பு. இவைகளில் முக்கியப்பங்கெடுத்துக் கொள்ளும் ரஸம் அல்லது பாரதம் (பாதரஸம்) யோகவாஹியானதாலும் காலதேசங்களில் ஏற்படும் மாறுதல்களால் கெடுதி அடையாதிருப்பதாலும், தீவ்ரசக்தி உள்ளதாக இருப்பதாலும், மருந்து வெகுநாட்பட வைத்திருக்கத் தகுதிபெற உதவுவதாலும் தனி இடம் பெறுகிறது.

ரஸத்தை ஔஷதங்களில் சேர்க்கத் தகுதி அளிக்க ஸாமான்ய முறையில் அதை சுத்திசெய்வதால் தேவையான வியாதியைக் குணமாக்கும் சக்தி ஓரளவிற்கு ஏற்படினும், நன்கு ஆராய்ந்தால் ஒவ்வொரு ரஸௌஷதமும் அஷ்டவித ஸம்ஸ்காரங்கள் செய்யப் பட்டால் தான் ஆச்சரியமளிக்கத்தக்க வகையில் பூர்ணகுணத்தை அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

ரஸத்தை நூல்களில் கூறப்பட்டுள்ள எட்டு ஸம்ஸ்காரங்களால் சுத்தி செய்வது மிகுந்த சிரமம். அல்லது இயலாது

என்ற எண்ணத்துடனேயே வெகுவாக வைத்யர்கள் சுருக்கு வழியில் ரஸசுத்தி செய்ய முற்படுகின்றனர். எட்டு ஸம்ஸ்காரங்கள் செய்வதால் சிறிதளவு வேலையும் செலவும் அதிகமெனினும், அதனுல் ஏற்படும் நன்மையை உத்தேசிக்குங்கால் எட்டு ஸம்ஸ் காரங்களும் மிகவும் அவசியமென்பது புலப்படும். ஒருதடவை இவ்வெட்டு வழிகளையும் மனதிற்கொண்டு செய்தால், பின் தொடர்ந்து அம்முறையைக் கையாளுவதில் சிரமமிருக்காது.

ஸ்வேதனம், மர்தனம், மூர்ச்சனம், உத்தாபனம், பாதனம் (ஊர்த்த்வ பாதனம், அதப்பாதனம் திர்யக்பாதனம்) போதனம், நியமனம், தீபனம் என்ற எட்டு ஸம்ஸ்காரங்கள் மிக அவசியமாகக் கருதப்படுகின்றன. அம்முறைகளை பொதுவாக முறையே விவரித்து சில விசேஷ முறைகளைப் பிற்பாடு விவரிப்போம்.

### ஸ்வேதனம்

நல்ல ரஸம் 1000 கிராம் எடுத்துக்கொள்வோம். திப்பிலி, மிளகு, சிகப்பு கொடிவேலிவேர்பட்டை, இஞ்சி, சுக்கு, இந்துப்பு, கடுக்காய்தோல், தானிக்காய் தோல், நெல்லிமுள்ளி இவைகளை வகைக்கு 6 கிராம் எடை (ஒவ்வொன்றும் ரஸத்திற்கு வீசம் பங்கு) எடுத்து தூள்செய்யவேண்டியவைகளை தூள்செய்து, மற்றவைகளையும் சேர்த்து காடி விட்டு நன்கு அரைத்து இதை ஒரு வாய்க்குறுகிய மட்சட்டியிலிட்டு சட்டியின் அரைப் பாகமளவு காடி நிரப்புவோம். நல்ல முரட்டுக் கதர்துணி-நெருக்கமாக நெய் தது—சதுரமாக எடுத்து தூளிபோன்று நான்கு மூலைகளையும் சேர்த்து அதில் பாதரஸத்தைவிட்டு ஒரு சிறிய குச்சியின் ஆதா ரத்தில் சட்டியின் வாய்புறத்திலிருந்து உள்தொங்கும்படி காடியில் இடிக்காதவாறு மேல் இரண்டங்குலம் உயர்ந்து நிற்குமாறு தொங்கவிடலாம். இதை அடுப்பிலேற்றி இளந்தீயில் மெதுவாக இருபத்து நான்கு மணி நேரம் எரிப்போம். நடுவே, காடி சுண்டி விட்டதைக் கவனித்துக்கொண்டே இருந்து, காடிகுறைந்ததும் முன் அளவு வரை நிரப்புவோம். இவ்வாறு மறுநாளும் காடி-தூள் கல்கம் இவைகளைத் தயார்செய்து எரிப்போம். இவ்விதம் மூன்று தினங்கள் செய்து பிறகு ரஸத்தை சூடான காடியால் அலம்பி எடுக்க ஸ்வேதனம் என்ற முதல் ஸம்ஸ்காரம் முடிந்துவிட்டது.

ஸ்வேதனம் என்பது ஆவியில் வேகவைப்பது. ரஸத்தை பொட்டணமாக துணியில் தொங்கவிட்டு காடியில் கரைத்த மருந்துச் சரக்குகளின் ஆவியில் வேகவைக்கிறோம். ரஸத்தி லுள்ள பல அழுக்குகள்—தெரிந்தும் தெரியாமலும் செய்கை யால் ஊகிக்கப்பட்டுமிருக்கும் அழுக்குகள் விஷாம்சங்கள் இவ் வேக்காட்டால் சிதிலப்பட்டு தனித்து வர ஆரம்பிக்கின்றன.

ஸ்வேதனத்தில் சற்று கடினமான மற்றொரு முறை உண்டு வேதம் வரை உள்ள ஸம்ஸ்காரங்களைச்செய்ய இம்முறை சிலாக்கியம். இன்றில்லாவிட்டாலும் என்றோ ஒரு நாள் வைத்யர்கள் வேதம் வரையுள்ள ஸம்ஸ்காரங்களை செய்துதான் ஆகவேண்டும்.

ஸ்வேதனம் செய்யுமுன் பூர்வாங்கமாக ரஸத்தை மருந்துச் சரக்குகளுடன் சேர்த்தரைத்து, சூடான காடி விட்டலம்புவது மலாபகர்ஷணம் என்ற ஒரு முறை. வெளி அழுக்கைப்போக்குவது இதன் கார்யம். தப்தகல்வத்தில் ரஸத்தை இடுவோம்; சுண்ணும்பு, ஒட்டடை, சிகப்பு கொடிவேலி வேர்ப்பட்டை, தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, கடுக்காய்தோல், வெல்லம், பொசுக்சிய ஆடு முதலியவைகளின் ரோமக்கரி, செங்கல், கற்றாழை, இந்துப்பு, கண்டங்கத்திரிவேர், முள்ளுக்கத்திரிவேர், திப்பிலி, செங்கடுகு, காட்டுப்பழுபாகலிலை, இவைகளை தனித்தனியே ரஸத்திற்கு வீசம் பங்கு எடுத்துக் கல்கமாக்கி ரஸத்துடன் சேர்த்துக் கல்வத்திலிட்டு காடிவிட்டு இருபத்துநான்கு மணிநேரம் சேர்ந்தாற்போல் அரைத்துப் பிறகு சூடான காடிவிட்டலம்பிக் கொள்ளலாம். இவ்விதம் மூன்று நாட்கள் செய்தபிறகு ஸ்வேதனம் செய்யலாம். இம்முறையிலுள்ள விசேஷத்தை மர்தனம் என்ற ஸம்ஸ்காரத்தின் கீழ் விவரிப்போம்.

தாம்ரபாத்திரத்தில் காடியை முன்முறையில் போல் நிரப்புவோம். ஒரு துணியில் ஒரு அங்குல கனத்திற்கு இந்துப்பு, செங்கடுகு, சுக்கு, மிளகு, திப்பிலி, முள்ளங்கி, சிகப்பு கொடிவேலி வேர்ப்பட்டை, தண்ணீர் விட்டான் கிழங்கு, மூக்கரட்டை, ஆடு தீண்டாப்பாளை (மேஷசிருங்கி என்பதை ஆடுதீண்டாப்பாளை என்பர் சிலர். ஆட்டுக்கொம்பு போன்ற உருவமுள்ள மற்றொரு சரக்கு வடநாட்டில் உபயோகத்திலிருப்பது பெயருக்கேற்றது) சிறுகீரை, சிறுகாஞ்சூரி வேர், இஞ்சி, மஞ்சள், குறுந்தோட்டி வேர், நவச்சாரம் இவைகளை சமனெடையாக எடுத்து அரைத்துத் தடவி, நடுவில் ரஸத்தை வைத்து தூளிகட்டி முன்போல வேகவைக்கவேண்டும். இவ்விதம் 21 நாட்கள் (முடியாவிடில் 7-3 நாட்கள்) செய்யவேண்டும்.

இவ்விதம் இவ்விருமுறைகளில் ஒன்றால் ஸ்வேதனம் செய்வதால், ரஸத்தில் செயற்கையிலோ இயற்கையிலோ சேர்ந்த வெளிப்படையான விஷகுணங்கள், அதற்காதாரமான திரவ்யம் ரஸத்தைவிட்டு பிரியும் வகையில் நெகிழச்செய்ய உதவுகின்றது.

காடி :— ரஸ ஸம்ஸ்காரங்களில் உபயோகப்படுத்தப் பெறும் காடி தனிப்பட்டது. யவை கோதுமை சம்பா அரிசி உளுந்து

பயறு கடலை சாமை வரகு முதலிய பலதான்யங்களை உமிநீக்கி மட்பாத்திரத்திலிட்டு நான்குபங்கு ஜலம் விட்டு அவை புளிக்கும்வரை மூடிவைத்து பின்னர் எடுத்து வடிகட்டிக் கொள்ளவும். இவைகளை வேகவைத்தும் புளிக்கவைக்கலாம். பிறகு அதில் சிறுபுள்ளடி, பொன்னுங்கண்ணி, மூக்கரட்டை (சிகப்பும் வெளுப்பும்), சிகப்பு கொடிவேலிவேர்பட்டை, மஞ்சள்பூவுள்ள கையாந்தகரை, விஷ்ணுக்ராந்தி, தண்ணீர்விட்டான் கிழங்கு, பேரரத்தை, மலையமுக்கி இலை, கொட்டக்ககரந்தை, நெய்சட்டிப்பூண்டு, கடுக்காய்தோல், தானிக்காய் தோல், நெல்லிமுள்ளி இவை எல்லாவற்றையும் காடிக்கான தானியவகையில் கால்பங்கு எடுத்து அரைத்துப் புளித்த திரவத்தில் கலக்கவும். 2-3 தினங்களுக்குப் பின்னர் வடிகட்டிக் கொள்ளவும்.

**தப்தகல்வம் :**—காந்தக்கல்லாலான கல்வம் அல்லது இரும்பு கல்வத்தை தணலின்மேல் வைத்துச் சூடாக்கி அதில் மருந்துகளை இட்டு அரைக்கச்செய்வது. இதற்காக கல்வம் தரையில்படியுமாறு தரையில் நடுவில் காற்றோட்ட மேற்படும் வகையில் ஒரு சிறு குழி செய்து தணலிட்டு அதன்மேல் கல்வத்தை வைக்கவேண்டும்.

**பாத்திரம் :**—முதன்முறையில் மட்பாத்திரத்திலிட்டு ஸ்வேதனம் செய்யவேண்டி யிருக்கிறது. மட்பாத்திரத்தை உபயோகப் படுத்தும்போது மிகுந்த கவனம் அது உடைந்து சிதருமல் பாதுகாக்கத் தேவை. இரண்டாவது முறையில் தாம்ரபாத்திரம். இதையே முதன்முறையிலும் உபயோகிக்கலாம்.

**மர்த்தனம் :**

ஸ்வேதனம் செய்த ரஸத்தை சில மருந்து சரக்குகளுடன் இடைவிடாமல் அரைப்பதுதான் மர்தனம். (மர்தனம்-அரைத்தல்)

இந்துப்பு, ஓட்டடை, செங்கடுகு, மஞ்சள், உள்ளிப்பூண்டு, இஞ்சி, கடுக்காய்தோல், தானிக்காய் வகைக்கு தோல், நெல்லிமுள்ளி இந்த சரக்குகளை வகைக்கு ரஸத்திற்கு வீசம் பங்கு எடுத்துக் கல்கமாக்கி ரஸத்துடன் சேர்த்து (கருங்கல்) கல்வத்திலிட்டு காடியும் புளித்த தயிரும் விட்டு மூன்றுநாட்கள் இடைவிடாமல் அரைத்துக்கொண்டே வருவோம். காய்ந்தால் மறுபடியும் காடியும் தயிரும் விடுவோம். 2-3 மணிக்கொருதடவை அரைக்கும் ஆளை மாற்றத்தான் வேண்டும். இல்லாவிடில் அரைவை நன்கு ஏருது. 3 நாட்கள் அரைத்த பின்னர் அதைக் காயவைத்து துணியில் பிழிந்து ரஸத்தைத் தனியாக்கிக் கொள்வோம். சூர்ணத்திலிருந்து ரஸம் சரியாகப் பிரியாவிடில் டமருயந்திரத்திலிட்டுப் பிரிக்கவேண்டியதுதான்.

மற்றொரு கடினமான முறையையும் கவனிப்போம். சுண்ணும்பு முதவிய மலாபகர்ஷணத்திற்குத் தயாரான சரக்குகள், பேய்க்கும்மட்டிவேர், சரக்கொன்னைப்பட்டை, அழிஞ்சில்ப்பட்டை, கரு ஊமத்தை விதை, சுக்கு திப்பிலி மிளகு இவை வகைக்கு ரஸத்திற்கு வீசம்பங்கு எடுத்து கல்கமாக்கி ரஸத்துடன் சேர்த்து காடிவிட்டு 24 மணிநேரம் அரைத்த பின்னர் சூடான காடிவிட்ட லம்பிக்கொள்ளவும். இவ்விதம் 21 நாள் செய்தால் மர்தனம் பூர்த்தியாகின்றது.

டமருயந்திரம் :— என்பது இரண்டுபானைகளின் வாயையும் ஒன்றின்மேல் ஒன்ருகப் பொறுத்தி ரஸகல்கத்தைக் கீழ்பானையிலிட்டு எரித்து, மேல்பானையில் தங்கிய ரஸத்தை எடுத்துக் கொள்வதுதான் அது.

(தொடரும்)

---


# நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

(நியூ பிருந்தாவனம் சமீபம்)

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்.

வைத்யர்

N. வைத்யநாதன், R. M. P.

# ஸ்ரீ சாங்காணி வைத்ய முறைகள்

## ஜ்வரத்தில்

**அஹிபேனுதி வடீ :**

அபின், கசகசா, சீந்தில் சர்க்கரை, கருவேலம்பிசின், ரப்பீ ஸூஸ் இவை ஸமனெடை எடுத்துத் தனித்தனியாகத் தூள் செய்து, கருவேலம் பிசினும் சேர்த்து இஸப்கோல் விதையை ஊற வைத்து எடுத்த ஜலத்தை விட்டரைத்து பயறளவு மாத்திரை உருட்டி, நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

வென்னீருடன் சாப்பிட இருமல், ஜ்வரம், தலைவலி, தூக்கமின்மை இவைகளில் நல்ல குணம் கிடைக்கும்.

**பிரலாபாந்தக ரஸம் :**

வெள்ளைப் பாஷாணம் ஒரு தோலா, சுத்திசெய்த வத்ஸநாபி ஒரு தோலா மிளகு 2 தோலா இவைகளைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்து, பயறளவு மாத்திரை உருட்டி இஞ்சிச்சாறும் தேனும் கலந்து கொடுக்க பிதற்றலுடன் கூடிய ஸந்நிபாத ஜ்வரத்தில் நல்ல குணமளிக்கும்.

**மிருதஸஞ்ஜீவனீ ரஸம் :**

சுத்த ரஸம் 1 தோலா, கந்தகம் 2 தோலா, இரண்டையும் கஜ்ஜலி செய்து, அப்பிரகபஸ்மம், லோஹபஸ்மம், தாம்ரபஸ்மம், சுத்தி செய்த வத்ஸநாபி, சுத்திசெய்த தாளகம், சோழிபஸ்மம், சுத்திசெய்த மனேசிலை, லிங்கம், கொடிவேலி வேர் பட்டை, யானைத்திப்பிலி, ஆனைக்கொம்பன், அதிவிடயம், மிளகு, ஸ்வர்ண மாக்ஷிக பஸ்மம் இவை வகைக்கு ஒரு தோலா, இவைகளை இஞ்சிச்சாறு விட்டு மூன்று தினமும், கருநொச்சியிலைச்சாறு விட்டு மூன்று தினமும், முன்னை இலைச் சாறு விட்டு 3 தினமும் அரைத்துக் காயவைத்து மண் சீல் செய்த குப்பியிலிட்டு வாலு காயந்திரத்திலிட்டு எட்டு மணி நேரம் எரித்து, தானுக ஆறியபின் எடுத்துக் குப்பியின் உள்ளிருக்கும் மருந்தை மறுபடியும் இஞ்சிச்சாறு விட்டரைத்து 2 யவ அளவு மாத்திரை உருட்டி, தேன் இஞ்சிச்சாறுடன் கொடுக்க கடும் ஸந்நிபாத ஜ்வரத்தில் மரணத்தறுவாயில் இருக்கும் நோயாளிக்கும் உடன் குணம் தருகிறது.

**நிமோனியா பட்டி :**

கோதுமை மாவை ஜலம்விட்டுப் பிசைந்து ரொட்டி தட்டி ரொட்டியை ஒரு இரும்புத் தகட்டி (தோசை கல்லி) லிட்டு அடுப்பில் வாட்டவும், ஒரு பக்கம் வாட்டப்பட்டவுடன் இறக்கி வாட்டப்படாத பக்கத்தில் சிற்றுமணக்கெண்ணெய்யைத் தடவி அந்தப் பக்கத்தை மார்பில் படும்படி ரொட்டியை வைத்துக் கட்டவும். இவ்விதம் கட்டுவதால், மார்பில் கட்டியுள்ள கபம் இளகி விடும். மார்பில் வலி குறைகின்றது; ஜ்வரவேகமும் தணிகின்றது.

ஆண்டிப்ளொஜிஸ்டன் நாலுதடவை கட்டுவதில் ஏற்படும் நன்மை இதை ஒரு தடவை கட்டுவதினுலேயே ஏற்படுகின்றது.

சமீபத்தில் ஒரு சிறுவனுக்கு நிமோனியா ஏற்பட்டு, பெனிஸிலின், ஆண்டிப்ளொஜிஸ்டின், ஸல்பா மாத்திரைகள் போன்றவை உபயோகப்படுத்தப்பட்டும் ஐந்தாறு தினங்களில் வியாதி கடுமையாகி நிராசையாகக் கைவிடப் பட்டபின் ஆயுர்வேத சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டது. முன் சொன்ன மிருதஸஞ்ஜீவனீ மாத்திரையும் பட்டியும் உபயோகித்தவுடன் இரண்டு தினங்களில் பூர்ண சுகம் கிட்டிற்று.

நிமோனியாவில் இந்தப் பட்டியும் மிருதஸஞ்சீவனி மாத்திரையும் மிகவும் நல்ல குணமளிக்கின்றன.

**பாஷாண வடி**

சுத்த ரஸம் ஒரு தோலா, சுத்த கந்தகம் ஒரு தோலா, வெள்ளைப் பாஷாணம் 1 தோலா, வெள்ளை கத்தக்காம்பு ஒரு தோலா இவைகளில், முதலில் ரஸகந்தகங்களைச் சேர்த்தரைத்து, மற்றவைகளையும் சேர்த்தரைத்து சிறுகாஞ்சூரிச்சாறு விட்டரைத்து கடுகளவு மாத்திரை செய்து கொள்ளவும். ஒரு மாத்திரை குளிர்ந்த ஜலத்துடன் கொடுக்க நிமோனியா, மாந்தம், சுவாசம், காஸம், விக்கல், கீழ்வாயுவு, புண்ணுன குஷ்டம், புரை, உபதம்சம், பசியின்மை இவைகளில் நல்ல குணமளிக்கின்றது.

பால் பத்தியம் நல்லது. எண்ணை கடுகு புளிப்பு தள்ளுபடி.

**ஸந்நிபாத ஜ்வரங்களில்**

மலேரியா டைபாய்டு போன்று ஸந்நிபாதஜ்வரமும் பலவிடங்களில் மிகக் கடுமையாக அபாயகரமாகவே தோன்றுகின்றது. சரியான சிகித்ஸை அளிக்கப்படாவிடில் அபாயமாகவே முடிகின்றது. இதில் காலாரி ரஸம் (ஸித்தயோக ஸங்கிரஹம்) இரண்டிரண்டு மாத்திரை தகராதி கஷாயத்துடன் கொடுக்க நல்லது.

**தகராதி கஷாயம்**

அஸாரூன், பர்படகம், சரக்கொன்னைப்புளி, கோரைக்கிழங்கு, கடுகுரோகிணி, ஜடாமாம்ஸீ, அமுக்கராக் கிழங்கு, வல்லாரை, திராக்ஷை, செஞ்சந்தனம், தசமூலம், சங்கங்குப்பி விதை இவைகளைச் சமனெடை சேர்த்து இடித்து வைத்துக் கொள்ளவும்

ஒரு தோலா கஷாயத்தூளுடன் 7 கிராம்பு சேர்த்து 6 அவுன்ஸ் ஜலம் விட்டு கஷாயமாக்கி $1\frac{1}{2}$ அவுன்ஸ் ஜலம் மீதமானவுடன் வடிகட்டிக்கொடுக்கவும்.

**நாட்பட்ட மலேரிய ஜ்வரத்தில்**

ஸுதர்சன சூர்ணம் ஒரு தோலாவை இரவு 4 அவுன்ஸ் வென்னீரில் ஊறப் போட்டு காலையில் நன்கு கசக்கி வடிகட்டிக் கொடுக்கவும். இவ்விதம் காலையில் ஊறப் போட்டு மாலையில் கொடுக்கவும். இவ்விதம் ஒரு மாதம் வரை கொடுக்க ஜ்வரம் நீங்கும்.

**மலேரியாவில்**

மலேரியாவின் வேகத்தை உடன் குறைக்க ; ஊமத்தை இலை 50 கொணரவும். ஜ்வரம் நன்கு ஏறித் திணறும் போது உள்ளங்கை இரண்டிலும் உள்ளங்கால் இரண்டிலும் இலையை வைத்து துணியால் கட்டவும். கடிகாரத்தையும் தர்மாமீடரையும் கொண்டு ஜ்வரம் இறங்குவதைக் குறித்துக்கொண்டே வர ஐந்து நிமிடத்திற்கு ஒரு டிகிரி ஜ்வரம் இறங்குவது புலப்படும். நார்மலுக்கு வரு முன்னரே பட்டியை அகற்றி விடவும். பிறகு வேறு ஜ்வரமருந்து கொடுக்கவும்.

**நிமோனியாவில்**

படிக்காரத்தையும் கற்கண்டையும் சமனெடை எடுத்து இரும்புவாணலியிலிட்டு அடுப்பிலேற்றி மலர வைக்கவும். இதில் 2-4 யவ அளவு எடுத்து சிருங்கபஸ்மம் சேர்த்து இஞ்சிச் சாறும் தேனும் விட்டுக் கொடுக்க கபம் குறைந்து ஜ்வரம் தணியும்.

**மாலினீவஸந்தாதி**

ஸ்வர்ண மாலினீ வஸந்தம் 5 தோலா, சிருங்கபஸ்மம் 1 தோலா, திப்பிலி 1 தோலா, சோழிபஸ்மம் 1 தோலா, லக்ஷ்மீ நாராயண ரஸம் 1 தோலா, கற்பூரசிலாபஸ்மம் $2\frac{1}{2}$ தோலா இவைகளை ஒன்ருக அரைத்து வைத்துக் கொள்ளவும். எல்லா வித ஜ்வரத்திலும் 4-8 யவ அளவு தேனில் கொடுக்க ஜ்வரம் தணிந்து அசக்தி, பசியின்மை நீங்கி குணம் ஏற்படும்.

**விஷம ஜ்வராரி ரஸம்**

மனேசிலே, கந்தகம், கல்சுண்ணும்பு, பொரித்த வெங்காரம் வகைக்கு ஒரு தோலா எடுத்துக் கற்ருழைச் சாறு விட்டரைத்து வில்லே தட்டி, 400 தோலா எடையுள்ள வராட்டியிலிட்டுப் புடம் போட்டு எடுத்து, அரைத்துக் கொள்ளவும் ஒரு யவ அளவு தினமும் 2 3 வேளே கொடுக்கவும் ஜ்வரம். இறங்கிவிடும். முறை ஜ்வரங்களில் மிகவும் நல்லது.

**மற்ெருரு விஷமஜ்வராரி**

கூப்கலா, குல்பனப்ஷா, மஞ்சள் இவை வகைக்கு 2 தோலா எடுத்து 32 அவுன்ஸ் ஜலத்திலிட்டு மூடி கஷாயமிடவும். பிறகு முறை ஜ்வரமுள்ளவன் கம்பளி போட்டு மூடிக்கொண்டு இதன் ஆவியைப் பிடிக்க வியர்த்து ஜ்வரம் இறங்கும். பிறகு இந்த கஷாயத்தை (2–3 அவுன்ஸ் அளவு) குடித்து விட்டுத் தூங்கவும். இது நாட்பட்ட முறை ஜ்வரங்களில் மிகவும் நல்ல குணமளிக்கும்.

**ஜ்வரம் எரிச்சலுடன் ஏற்பட்டால்**

நிலவேம்பு, சுக்கு, சீந்திற்கொடி, பர்படகம், கோரைக்கிழங்கு இவை சமனெடை எடுத்து இடித்து வைத்துக்கொள்ளவும். வேளேக்கு $\frac{1}{2}$ தோலா அளவு எடுத்து 6 அவுன்ஸ் ஜலத்திலிட்டு $1\frac{1}{2}$ அவுன்ஸ் ஜலம் மீதமாகக் காய்ச்சிக் கொள்ளவும். ஸஞ்சீவனி வடி, ஆனந்தபைரவ வடி, கரஞ்சாதிவடி இவைகளில் ஒன்றில் 2 மாத்திரை வீதம் சாப்பிட்டு மேல் அனுபானமாக கஷாயத்தைச் சாப்பிடவும்.

**ஜ்வரம் குளிருடன் ஏற்பட்டால்**

திரிபலே, சீந்திற்கொடி, கருப்புதிராக்ஷை, வெட்பாலேயரிசி, கோரைக்கிழங்கு, பர்படகம் இவை ஸமபாகம் எடுத்து இடித்துத் தூள் செய்து கொண்டு முன்போல் கஷாயமிட்டு ஏதாவது ஒரு மாத்திரையுடன் கொடுக்க ஜ்வரம் இறங்கும்.

**ஆனந்தபைரவ ரஸம்**

சுத்தலிங்கம், சுத்தவத்ஸநாபி, மிளகு, பொறித்த வெங்காரம், திப்பிலி இவைகளே ஸமனெடை எடுத்து எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்து 2 யவ அளவு மாத்திரை உருட்டிக்கொள்ளவும்.

எல்லாவித ஜ்வரம் சளி இருமல் இவைகளில் நல்லது.

**கரஞ்சாதி வடி**

கழற்சிப்பருப்பு வறுத்தது 10 தோலா, திப்பிலி 10 தோலா, ஜீரகம் 5 தோலா, காய்ந்த கருவேலம் தழை 5 தோலா இவை

களை இடித்து வஸ்திரகாலனம் செய்து ஜலம் விட்டரைத்து பெரிய இலந்தைக்கொட்டை அளவு மாத்திரை உருட்டி விடவும். குளிருடன் வரும் ஜ்வரத்தில் இதைச் சாப்பிடுவது நல்லது

ஸஞ்சிவனி வடி :

வாய்விடங்கம், சுக்கு, திப்பிலி, கடுக்காய் தோல், நெல்லி முள்ளி, வசம்பு, சீந்திற்கொடி, சுத்தவத்ஸநாபி, சுத்த சேங் கொட்டை இவை வகைக்கு சமனெடை எடுத்துத் தூள் செய்து கோமூத்திரம் விட்டு அரைத்து 2 யவ அளவு மாத்திரை உருட்டிக் கொடுக்கவும். எல்லா ஜ்வரங்களிலும் நல்ல குணமளிக்கின்றது.

காலாரி ரஸம் :

சுத்தி செய்த ரஸம் 3 தோலா, சுத்த கந்தகம் 5 தோலா, சுத்த வத்ஸநாபி 3 தோலா, திப்பிலி 10 தோலா, கிராம்பு 4 தோலா, சுத்தி செய்த கருஊமத்தை வித்து 3 தோலா, பொரித்த வெங்காரம் 3 தோலா, ஜாதிக்காய் 5 தோலா, மிளகு 5 தோலா அக்கிரகாரம் 3 தோலா இவைகளில் ரஸத்தையும் கந்தகத்தை யும் கஜ்ஜலி செய்து மற்றவைகளையும் நன்கு தூள் செய்து கலந்து அரைத்து இஞ்சி, எலுமிச்சம்பழம் இவைகளின் சாற்றின் 3-3 தினங்கள் அரைத்து 4-யவ அளவு மாத்திரை உருட்டவும்.

இஞ்சிச்சாறு, துளசிச்சாறு, 7-21 கிராம்புகளின் கஷாயம் இவைகளில் ஒன்றுடன் வாத ஜ்வரம், சுப ஜ்வரம், வாதகபஜ்வரம் இவைகளில் கொடுக்கவும். ஸந்நிபாத ஜ்வரத்தில் தகராதி கஷாயத்துடன் கொடுக்கலாம். அல்லது கிராம்பு 7(எண்ணிக்கை) பிரமிவழுக்கை இலை கால் தோலா, ஜடாமாஞ்சி கால் தோலா, சங்கங்குப்பி இலை கால் தோலா இவைகளைக் கஷாயமிட்டும் அனுபானமாகக் கொடுக்கலாம். முறை ஜ்வரத்தில் ஜாதிக்காய் தூள் அரைக்கால் தோலா சேர்த்துக் கொடுத்து மேல் பால் கொடுக்கவும். அல்லது வேப்பிலைச்சாறு விட்டரைத்தும் புடம் போட்ட கர்பூரசிலாசத்து பஸ்மம் 15 யவம் சேர்த்தும் கொடுக்கலாம்.

ஜ்வரஹரவடீ :

லவங்கப்பட்டை, திப்பிலி, பொரித்த வெங்காரம், சுத்தி செய்த லிங்கம், சுத்தி செய்த நேர்வாளம் இவைகளை கம்மாறு வெற்றிலைச் சாற்றிலரைத்து பயறளவு மாத்திரை உருட்டவும். ஸாதாரண ஜ்வரத்தில் ஜலத்துடனும், குளிர் ஜ்வரத்தில், கூப்கலாம் 1 தோலாவை இடித்து கஷாயமிட்டு அக் கஷாயத் துடனும் கொடுக்க நல்லது.

— — —

**எனது அனுபவம் :— 1**

# உதரத்தில் சிகித்ஸை

ஒருவர் — பிராமணர், வயது 47. உதரநோய். என்னிடம் ஸமீபத்தில் வந்தார். அதற்கு முன் தூத்துக்குடி சர்க்கார் ஆஸ்பத்திரியிலும், சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியிலும் சிகிச்சை செய்யப்பட்டு, As the condition is not responding, patient is not fit for Porta Caval anestomisis and hence discharged என்ற குறிப்புடன் அனுப்பப்பட்டுள்ளார். என்னிடம் வரும்போது வியாதி வந்து சுமார் 6 மாதங்கள் ஆகிவிட்டன.

வியாதியின் முன் சரிதம் — நல்ல பசி — ஜீர்ணசக்தி இவைகளுக்கேற்ப நல்ல சாப்பாடு, மட்டற்ற புகையிலையுடன் தாம்பூலம் சுருசுருப்பற்ற வாழ்க்கை, குழந்தைகளில்லை, நடுநிலையான தேக வாகு — இவ்விதமிருந்தவருக்கு கிரமமாக பாண்டுவும் அன்ன துவேஷமும் கைகால்களில் அதைப்பும் வயிற்றில் கனமும் ஏற்பட்டு தூத்துக்குடி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். அங்கு Cirrhosis of Liver என்று நிதானிக்கப்பட்டு அதிக பத்யமில்லாமல் — நீர் பிரிக்கும் ஊசி, மருந்துகள் முதலியவைகளால் 2 மாதம் சிகிச்சையிலிருந்தார். அங்கு முதல் தடவையாக வயிற்றிலிருந்து குத்தி 300 அவுன்ஸ் நீர் எடுக்கப்பட்டது. மறுபடியும் நீர் நிரம்பிக்கொள்ளவே அங்கு வந்த ஸர்ஜன் ஜெனரலின் அனுமதியின் பேரில் சென்னையில் தற்சமயம் விசேஷ ஆபரேஷன் (Porta-caval anestomiss) மூலம் இவ்வியாதியை குணப்படுத்தலாம் என்று ஜெனரல் ஆஸ்பத்திரியில் அன்று சேர்க்கப்பட்டார். அங்கும் தேகநிலையில் ஆபரேஷனுக்கேற்ற தெம்புக் குறைவைக் கவனித்து அவ்வாபரேஷனை செய்ய முடியாதெனத் தீர்மானித்து பொதுவான சிகிச்சைகளே கையாளப் பட்டன. ஆகாரத்தில் விசேஷ பத்யமில்லை. அங்கிருக்கும்போது இருமுறை வயிற்றிலிருந்தும் குத்தி நீர் எடுக்கப்பட்டது. இவ்வகை சிகிச்சைகளாலும், நீர் பிரிக்கும் ஊசிகளாலும் பிரயோசன மேற் படாது போகவே முன் கொடுத்த குறிப்புகளுடன் வெளியே அனுப்பப்பட்டார்.

என்னிடம் சிகிக்சைக்கு வரும்போது இருந்த நிலை வயிற்றில் பூர்ணமாக நீர் நிறைவு, கல்லீரல் மண்ணீரல் நிலையை உணர முடியாத அளவு வயிற்று வீக்கம், ஊசி போட்டாலன்றி நீர் நன்கு பிரியாமை, கள்ளப்பசி, பாண்டு, ஹிருதயப்படபடப்பு, கை கால், முகங்களில் வீக்கம், நடக்கவோ, அதிக நேரம் உட்காரவோ

முடியாமை, தொப்புள் பிரதேசத்தில் வயிற்றின் சுற்றளவு 38 அங்குலம், மார்பு (ஸ்தன பாகத்தில்) சுற்றளவு $28\frac{1}{2}$''.

**சிகிச்சை :**

உப்பில்லாத பத்யம் — புழுங்கலரிசிக் கஞ்சி, தனியாகப் பால், பாலில் கரைத்த அன்னம் — இவைகள் ஆகாரமாக அனுமதிக்கப் பட்டன. தனியாக தாகத்திற்கு ஜலம் குடிக்க அனுமதிக்கப்பட வில்லை.

மருந்து — தான்வந்தரவடி, 1 வடி, துக்தவடி 1 வடி — பொடித்துத் தேனுடன் தினம் 3 வேளை, ஆகாரத்திற்கு முன், அனுபானமாக புனர்னவாஷ்டகக்வாதம் (5 தோலா சரக்கில் 16 அவுன்ஸ் ஜலம் விட்டு 3 அவுன்ஸ் மீதமாகக் காய்ச்சியது) வேளைக்கு ஒரு அவுன்ஸ், ச்வேதபர்படி $\frac{1}{8}$ தோலா கரைத்தது-ஒவ்வொரு வேளைக்கும். வயிற்றில் வெள்ளரி விதை, நவச்சாரம் சேர்த்து அரைத்துப் பற்று போடப்பட்டது. இவ்விதம் 15 நாட்கள் கொடுக்கப்பட்டன. இதுவரை உப்பில்லா ஆகாரத்தைச் சாப்பிட்டே அறியாத நோயாளிக்கு இப் பத்தியம் முதலில் பெருத்த கலக்கத்தை அளித்தாலும் சிறிது சிறிதாக தானே நீர் பிரிந்து வயறு கனம் குறைந்ததும் மனோதிடம் ஏற்பட்டு, பத்தி யத்தை மிகவும் கவனத்துடன் பின்பற்ற ஆரம்பித்தார்.

இதற்குள் வயிறு நன்முக வடிந்து கால் வீக்கம் குறைபட்டதும் எழுந்து நடமாட தென்பு வந்துவிட்டது. வயிற்றின் சுற்றளவு 33 அங்குலமிருந்தது. அமுக்கிப்பார்க்கத் தகுதி ஏற்பட்டது. அதன் பின் துக்தவடியை நிறுத்திப் புனர்னவா மண்டூரத்தைத் தான் வந்தரவடியுடன் புனர்னவாஷ்டக கஷாயம் (ச்வேதபர்படி கரைத்தது) அனுபானத்துடன் ஒரு வாரம் கொடுத்ததில் நல்ல குணம் ஏற்பட்டது. பிறகு உப்பை வறுத்து அரை அளவு, (புளி யில்லாமல்) பகலில் ஒரு வேளை மாத்திரம் சாப்பிட அனுமதிக்கப் பட்டது.

புனர்னவாஷ்டக கஷாயத்தால் நல்ல மலவிஸர்ஜனமும், மூத்ரம் எரிச்சல் முதலியவை இல்லாமல் நன்கு பிரிந்து உடல் வீக்கம் நன்கு வாடியது. 45 நாட்கள் இதே முறை செய்யப் பட்டது. வயிற்றிலுள்ள நீர் வெளிப்பட்டதும், முன்பு விரிந்த வயிற்று மாம்ஸபேசிகள் இயற்கையான சுருக்கம் பெறுததால், ஆங்காங்கு பள்ளமும், பள்ளங்களில் நடுநடுவே சிறு குடல் அசைவு புலப்படுவதுமாகக் காணப்பட்டது. இதற்காக வயிற்றைத் தடித்த துணியால் சுற்றி வயிற்றுக்கு ஓர் நல்ல தாங்குதல்

கொடுத்து வரப்பட்டது. நாள் முழுவதும் இதைத் தரித்திருக்க ஒரு வாரத்தில் வயிற்று மாம்ஸபேசிகள் இயற்கைச் சுருக்கத்தைப் பெற்று நல்ல வலிவடைந்தன.

இதன் பின் தினம் இருவேளை அச்வகந்தாதி லேகியம் ஒரு தோலா அளவு காலை மாலைகளிலும் பகல் இரவு ஆகாரங்களுக்குப் பின்னர் தினம் 3 வேளை புனர்னவாமண்டூரம் ஒரு மாத்திரையும் தான்வந்தர மாத்திரை ஒரு மாத்திரையும் பலாமிச்யர்க்கத்தில் கரைத்தும் கொடுக்கப்பட்டது. இதன்மேல் அனுபானமான கனகாரிஷ்டமும் திராக்ஷாரிஷ்டமும் கொடுக்கப்பட்டது.

உடலில் நீர் வற்றுவதற்காக உபயோகிக்கப்பட்ட மருந்துகளின் வீர்யத்தால் நடுவில் சில நாட்கள் ஆகாரம் முழுங்குவதில் சிரமமேற்பட்டது. அதாவது வாயு அடைப்பது போன்ற சிரமம் குனிந்து சாப்பிடும்போது ஏற்பட்டது. நிமிர்ந்து ஸ்பூன் முதலியவைகளால் சாப்பிடும்போது இந்த சிரமமில்லை. இதற்கு வாதானுலோமனமாக ஸுகுமாரகிருதம் $\frac{1}{4}$ அவுன்ஸ் தினம் காலையில் 3 நாட்கள் கொடுத்ததில் குணம் கிடைத்தது. நோயாளி பூர்ண சுகம் பெற்று ஊர் சென்றார். அச்வகந்தாதி லேகியம் புனர்னவா மண்டூரம், தான்வந்தரவடி, திராக்ஷாரிஷ்டம், கனகாரிஷ்டம் இவைகளைத் தொடர்ந்து சாப்பிட்டு வருகிறார்.

## உபயோகித்த மருந்துகள்

**புனர்னவா மண்டூரம்—**

மூக்கரட்டைவேர், செவதைவேர், சுக்கு, திப்பிலி, மிளகு, வாய்விளங்கம், தேவதாரு, சித்திரமூலப்பட்டை, புஷ்கரமூலம், கடுக்காய்த்தோல், நெல்லி முள்ளி, தானிக்காய்த் தோல், மஞ்சள், மரமஞ்சள், தந்திமூலம், செவ்வியம், வெட்பாலையரிசி, கடுகுரோகிணி, கண்டதிப்பிலி, கோரைக்கிழங்கு இவை வகைக்கு ஒரு தோலா மண்டூரம் 40 தோலா, இவைகளைத் தூள்செய்து 3 படி கோமூத்திரத்தில் கரைத்து அடுப்பிலிட்டு எரித்து லேகியபதத்தில் எடுத்து அரைத்து 6 யவ அளவில் மாத்திரை உருட்டிக் கொள்ளவும். —[பைஷஜ்யரத்னுவளி]

**துக்தவடி—**

சுத்த வத்ஸநாபி பாலில் அல்லது கோமூத்ரத்தில் சுத்தி செய்த கரு ஊமத்தை விதை. சுத்தலிங்கம் வகைக்கு ஒரு தோலா கரு ஊமத்தை இலைச்சாறினுல் அரைத்து பயறளவு மாத்திரை உருட்டவும். —[பைஷஜ்யரத்னுவளி]

**தான்வந்தரவடி** — [ஸஹஸ்ரயோகத்தில் வெளியாகியிருக்கிறது.]

**புனர்னவாஷ்டகம்—**

மூக்கரட்டைவேர், வேப்பம்பட்டை, பேய்ப்புடல், சுக்கு, கடுகுரோகிணி, சீந்திற்கொடி, மரமஞ்சள், கடுக்காய்த்தோல் இவை வகைக்கு சமனெடை. —[ஸஹஸ்ர யோகம்]

**பலாமிசியர்கம்—**

சிற்ருமுட்டிவேரை இடித்து 8 பங்கு ஜலத்தில் போட்டு அர்க்கயந்திரத்திலிட்டு அர்க்கம் எடுக்கவும். இவ்விதம் சோம்பின் அர்க்கமும் எடுக்கவும். இவை யிரண்டையும் சேர்த்து உபயோகிக்கலாம். —[எனது அனுபூதயோகங்கள்.]

**ச்வேதபர்படி—**

படிக்காரம் ஒரு பங்கு நவச்சாரம் 2 பங்கு, வெடியுப்பு 8 பங்கு இவைகளை ஒன்ருகக் கலந்து மண் சராவத்திலிட்டு கரியடுப்பில் கடுந்தீயில் எரிக்க, முதலில் வெடியுப்பு நவச்சாரங்களின் புகை வெளியாகும். பிறகு உருகி நல்ல ஆஸிட் போன்ற திரவமாகும். அந்நிலையில் அதை ஒரு அகன்ற பீங்கான் தட்டில் கொட்ட அப்பளம் போன்று ஆகும். அதை இடித்துத் தூள்செய்து உபயோகிக்கவும்.

— எஸ் வி. ரா. சாஸ்திரீ.

---

# ஆரோக்கியப் பாதுகாப்பிற்கான முறைகள்.

**கால் வெடிப்பில்:** வெல்லம், பூங்காவி, குக்கில், வெள்ளைக் குங்கிலியம், இந்துப்பு, தேன்மெழுகு, பசு நெய் இவைகளைக் கொண்டு களிம்பு தயாரித்துக் காலில் தடவ உள்ளங்காலில் ஏற்படும் வெடிப்பு மறைந்து தாமரை இதழ்கள் போன்று அழகு பெறும்.

**கால் ஆணியில்:** கற்ருழையை இரண்டாகப் பிளந்து கால் ஆணிமேல் வைத்துக் கட்டி வர மூன்று நாட்களிலேயே கால் ஆணி மறையும்.

**நெருப்புப் புண்ணில்:** ஜீரகத்தைக் கஷாயமாகவும், கல்கமாகவும் சேர்த்துத் தயாரித்த நெய்யில் தேன் மெழுகும் வெள்ளைக்

குங்கிலியமும் சேர்த்து (நெய் 4 தோலா, மற்ற இரண்டும் ஒவ்வொரு தோலா) களிம்பு தயாரித்துத் தடவ நெருப்பு சுட்ட புண் உடன் தணியும். யவைத் தாள்களை எரித்து நல்லெண்ணெய்யி விட்டுக் குழப்பி மை தயாரித்து சுட்ட புண்மேல் தடவி வர வேதனை குறைந்து ஆறிவிடும்.

**சேங்கொட்டை விஷத்தில்:** சேங்கொட்டை சாப்பிட்டோ அதன்பால் மேல்பட்டோ விஷவேகத்தால் ஏற்படும் வீக்கம் அரிப்பு முதலானவைகளில் எள்ளைத் தூள் செய்து எருமைப்பால் விட்டரைத்து எருமை வெண்ணெய் கலந்து மேல்பூசவும், உள்ளுக்குச் சாப்பிடவும் நல்லது.

**கத்தி வெட்டில்-அடிபட்ட புண்ணில்:** அதில் பாகமேற்படாத நிலையில் அதாவது கத்தி பட்ட உடனேயே பசுவின் நெய்யில் பச்சைக் கர்ப்பூரத்தைக் குழப்பி வைத்து வெள்ளைத் துணி போட்டு கட்ட உடன் புண் ஆறிவிடும்.

முக்காவேளை வேரை வாயிலிட்டுக் கடித்து மென்று அதன் குழம்பைப் புண்ணிலிட்டுக் கட்ட உடன் அடிபட்ட புண் ஆறும்.

அவ்விதமே, புதிதாகப் பிறந்த எருமைக்கன்றின் முதல் சாணத்தை உணர்த்தி எடுத்த தூள் வைத்துக்கட்ட அதுவும் நல்லது.

நெய்சட்டிப் பூண்டின் சாற்றைப் பிழிந்து புண்ணில் நிரப்பி துணி வைத்துக் கட்ட ஒரு கட்டுடன் புண் ஆறிவிடும்

முக்காவேளை வட்டத்திருப்பி தொட்டாச்சுருக்கி இவைகளில் ஏதாவதொன்றை ஜலம்விட்டரைத்துத்தடவ எந்த வெட்டுப்-புண்ணும் ஆறிவிடும்.

தொட்டால்வாடிச்சாறுவிட்டு காய்ச்சிய தைலத்தைப் புண் மேல் துணியில் நனைத்து வைக்க அடிபட்ட புண் ஆறும்.

இவையெல்லாம் புண்ணில் சீழ் வைக்குமுன் செய்ய வேண்டியவை.

பச்சையான நாயுருவி வேரை அரைத்துக் காய்ச்சிய நல்லெண்ணெய் புண்ணிலுள்ள வலியை உடனே குறைத்து விடும்.

காட்டுத்திராக்ஷை, காட்டுக்கத்தாழை, சோற்றுக் கத்தாழை, காட்டுப் பழுபாகல், நாயுருவி இவை ஸம அளவு கல்கமாக்கிக் கலந்து தைலம் காய்ச்சி வடிகட்டி உபயோகிக்க சஸ்திரங்களால் ஏற்பட்ட காயங்களில் வலிநீங்கி புண் ஆறும்.

நாயுருவி இலைகளைக் கையால் கசக்கி அடிபட்ட விரணத்தின் மேல் சாற்றைப் பிழிய ரக்தம் நின்று விடும்.

கலப்பைக்கிழங்கின் உருண்டையான கிழங்கை ஜலம் விட்டரைத்து விரணமுகத்தில் பூச, புண்ணினுள் வெகுநாட்களுக்கு முன் சென்ற ஆயுதச் சிதள்களும் முள் முதலியவைகளும் சென்ற வழியே வெளியாகும்.

— — —

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

## BHALLA BROTHERS (Regd.)

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

## K. L. TALWAR & BROS.,

MUSK MERCHANTS,

P. B. No. 17, LUDHIANA.

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.

FOR PURE MUSK, KASHMIR SAFFRON
GOROCHAN & INDIAN CRUDE DRUGS

WRITE TO

## M|s. Kalia Brothers (Regd.)

**Wholesale Musk & Indian Drugs Merchants,**

JULLUNDUR CITY (PUNJAB)

**Gram: KALIA** Phone: **Office - 3232**
**Resi. - 4343**

சுத்தமான கஸ்தூரி, காஷ்மீர் குங்குமப்பூ,
கோரோசனை மற்றும் மருந்து சரக்குகட்கு

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :

## கலியா பிரதர்ஸ் [ரிஜிஸ்டர்ட்]

கஸ்தூரி மருந்து சரக்கு மொத்த வியாபாரி,

ஜல்லந்தர் ஸிடி (பஞ்சாப்).

தந்தி: KALIA போன்: ஆபீஸ் – 3232
வீடு – 4343

தந்தி : " அம்ருதம் "  P. B. No. 1382.  போன் : 26006

# தி ஆர்ய வைத்திய பார்மஸி
## (கோயமுத்தூர்) லிமிடெட்

தலைமை ஆபீஸ்: 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.

**உண்மையான ஆயுர்வேத மருந்துகளுக்கும் சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்**

எங்களுடைய கிளைகள்:

| | | |
|---|---|---|
| 1. | 23-B, பூஸா ரோடு, புது டில்லி-5 | போன் : 585687 |
| 2. | மொய்தீன் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1 | ,, 2984 |
| 3. | கௌடியா மடத்தெரு, மதராஸ்-14 | ,, 85752 |
| 4. | வளிஞ்ஞம்பலம், எர்ணாகுளம், கொச்சின்-16 | ,, 32336 |
| 5. | பிள்ளையார் கோயில் ரோடு, கண்ணனூர்-1 | ,, 92 |
| 6 | மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1 | ,, 195 |
| 7. | கடைவீதி, பொன்னானி | ,, 41 |
| 8. | ரௌண்ட் வெஸ்டு, திருச்சூர்-1. | ,, 738 |
| 9. | கோர்ட் ரோடு, ஆலத்தூர் | ,, 87 |
| 10 | மெயின் ரோடு, கஞ்சிக்கோடு | |
| 11. | ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18 | 33758 |
| 12. | இந்திரா பில்டிங், கள்ளிக்கோட்டை-2 | ,, 4891 |
| 13. | T. T. 384 K. டெலிச்சேரி ரோடு, கண்ணனூர்-2 | 842 |
| 14. | No. 263, 64. 11 வார்டு, மெயின் ரோடு, எடப்பாள் (பொன்னானி) | 31 |
| 15. | ஹல்வா பஜார் ரோடு, கள்ளிக்கோட்டை-1 | |

பாக்டரி :
கஞ்சிக்கோடு (கேரளா)
(போன் : 2)

நர்ஸிங் ஹோம் :
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18
(போன் ; 22194)

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க :—

ஆர்ய வைத்தியன் P. V. ராம வாரியார்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

# வாரியர்

# க்ஷீரபலா 101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களேயும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து வாயுவினுல் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளேயும் நிச்சயமாகக் குணப்படுத்தும், மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலேவலி முதலிய கோளாறுகளேயும் குணப்படுத்தும்.

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்துவந்தால் வாத ரோகங்களும் விருத்தாப்பியத்திஞல் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலே 25 ML. ரூ. 7-00 12 ML. ரூ. 3–75

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைஞபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE : 5441 வீடு போன் : 6074

[1936-ல் நிறுவப்பட்டது].

# திருச்சி ஆயுர்வேதிக் யூனியன்
## பிரைவேட் லிமிடெட்

(ஸ்தாபிதம் 1939)

விற்பனே அண்டு ரிஜிஸ்டார்ட் ஆபீஸ்
31-A, சின்னகடைத் தெரு,
திருச்சிராப்பள்ளி–2.
போன் எண் : 4202

## சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு முப்பத்திமூன்று ஆண்டுகளாக பிரஸித்தமான இடம்.

பிரஸவித்த மாதர்கட்கு:

**ஸௌபாக்கிய ரஸாயனம்**

ஜீர்ண சக்தி, ரத்தவிருத்தி அளிக்கும் சிறந்த லேஹியம்.
300 கிராம் பாட்டில் ரூ. 5.

**பயஸ்யா**

தாய்ப்பாலே வளர்க்கும் திவ்ய ரஸாயன லேஹியம்.
300 கிராம் பாட்டில் ரூ. 5–50
— தபால் செலவு தனி —


சாஸ்திரீய ரீதியில் தகுந்த நிபுணர்களின் மேற்பார்வையில்
தயாரிக்கப்பெற்ற
மற்ற எல்லா ஆயுர்வேத மருந்துகளும்
இங்கு கிடைக்கும்.

வைத்தியர்களுக்கும் பொதுமக்களுக்கும்
— மிகவும் நம்பிக்கையான இடம் —

T. S. ஈச்வரன், L.I.M.
மானேஜிங் டைரெக்டர்.

# இம்ப்காப்ஸ்

## புராதன பாரம்பரியத்துடன் நவீன தொழில் நுட்பமும் இணைந்து நிற்கும் நிறுவனம்.



இம்ப்காப்ஸ் இந்திய மருத்துவர்களின் இணையில்லாத ஒரு கூட்டுறவு நிறுவனம். புராதன நூல்களில் கூறியுள்ள முறைகள், தரங்களை கண்டிப்பான முறையில் பின்பற்றி ஆயுர்வேத, சித்த, யூனானி மருந்துகளை அது தயாரித்து வருகிறது. மருந்துகளை தயாரிக்கும் ஒவ்வொரு கட்டத்திலும் அதிக கடுமையான முறையில் தரப் பரிசோதனை செய்யப்படுகிறது புராதன மருந்துகளை தயாரிப்பதில் நவீன பாக்கிங் முறைகளையும் இயந்திரங்களையும் இம்ப்காப்ஸ் பயன்படுத்தி வருகிறது. சுதேச மூலிகைகள் பற்றிய இடைவிடாத ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள இம்ப்காப்ஸ் புராதன இந்திய மருந்துகள் சம்பந்தமாக ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கப் பாடுபடுகிறது.

Impcops

**உண்மையான ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளுக்கு பெயர் பெற்ற நிறுவனம்**

இம்பகாப்ஸ் மருநதுகள் எலலா முக்கிய மருநது கடைகளிலும் கிடைக்கும்

**இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.**

அடையார், சென்னை 20.

**விற்பனை நிலையங்கள்:** 4/86, மவுண்ட் ரோடு, சென்னை-2. போன்: 8652

48, ஸொத் மாஸி தெரு, மதுரை. போன்: 30875

16, வெஸ்ட்காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை-14.

maa/IMP/961/M TAM

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்டகால பரீக்ஷை அனுபவத்தினால்

கண்டுபிடிக்கப்பட்ட கைகண்ட பலனளிக்கும்

# "சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைகட்டிகளை

எந்நிலையிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

**சக்தி விலாஸ வைத்தியசாலா**

கரூர் (S. Ry.)


Edited and published by Dr. T. S. Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2
Printed at Githa Press, Tiruchirapalli-2.